கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:22.09.2023

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகம் இடையே பெங்களூருவில் 21.09.2023 அன்று முதுகலை மாணவர்களின் ஆராய்ச்சியை எளிதாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. முதன்மையாக இருவேறு நிறுவனங்களுக்கிடையே கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை வளர்ப்பது, மாணவ பரிமாற்றத் திட்டத்தின் மூலம் முதுகலை மாணவர்கள் பரிமாற்றத்தைத் தொடங்குவது போன்ற அம்சங்களை இரு பல்கலைக்கழகங்களும் கூட்டாக ஒப்புக் கொண்டன. இதில் பங்கு பெறும் மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பு பின் ஒரு பகுதியை ஒரு பல்கலைக்கழகத்திலும் மற்றொரு பகுதியை மற்றும் ஒரு பல்கலைக்கழகத்திலும் முடிக்க வேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி மற்றும் ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தின் இணை துணைவேந்தர் பேராசிரியர் டெபோரா ஸ்வீனி ஆகியோர் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தின் சார் துணை வேந்தர் பேராசிரியர் லிண்டா டெய்லர் முன்னிலையில் மாணவர்களின் நலனுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பின்னர், இந்த கல்வி ஒத்துழைப்பின் இன்றியமையாமை மற்றும் முன்னோக்கி செல்லும் வழிகள் பற்றி குறிப்பிட்டனர்.

உடன் பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எஸ்.வி.சுரேஷ், கேரள வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஏ.சாகீர் உசேன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில், மேற்கு சிட்னி பல்கலைக்கழக மூத்த ஆலோசகர் (ஆராய்ச்சி வியூகம் மற்றும் கூட்டாண்மை) முனைவர் நிஷிராகேஷ் மற்றும் பிறதரப்புகளின் பிரதிநிதிகளும் இக்கையொப்பமிடும் நிகழ்வில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**